1972 மார்ச் 21]

(இ) மாதம் ஒன்றுக்கு வாடகையாக ரூபாய் 12,480 தரப் படுகிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, ஏற் கனவே இந்தத் துறைக்காக ஒரு தனி இடம் தேர்ந்தெடுக்கப்பட்டு, அங்கே ஒரு கட்டடத்தைக் கட்டி, வாடகை இல்லாமல் இருப்பது பற்றி பரிசீலனையில் இருந்ததே, அது தற்போது எந்த நிலையில் உள்ளது? இனிமேலாகிலும் தனிக் கட்டடம் கட்டப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதற்கான முயற்சி எதுவுமில்லை. தனி இடத்தில் கட்டடம் கட்டுவதற்கு பெரிய செலவு ஏற்படும். அப்படி செலவு ஏற்பட்டால், வாடகை இல்லாமல் வைப்பதற்கான முயற்சியில் ஈடுபடலாம். இப்பொழுது கொடுக்கப் படுகின்ற வாடகை ஓரளவுக்கு மற்ற துறைகளில் கொடுக்கப்படுவதை விட குறைந்து இருக்கிறது. சொந்த அலுவலகம் ஏற்பட்டால், வாடகை இல்லாத சூழ்நிலை ஏற்படும். அதுபற்றி நிதிவசதி ஏற்படும் பொழுது கவனிக்கப்படும்.

அரசுக் கல்லூரிகளுக்கானத் தேர்வுக் குழுக்கள்.

*602 வினு.—திரு. எம். முத்தையா : மாண்புமிகு கல்வி–உள் ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசாங்கக் கல்லூரிகளில் மாணவர்களைப் பொறுக்கு வதற்கான தேர்வுக்குழுவில் அக்கல்லூரிகளில் பணிபுரியும் அரிசன ஆசிரியர்கள் உறுப்பினராக தற்போது சேர்க்கப்பட்டுள்ளனரா?

(இ) ஆமெனில், எந்தெந்த அரசாங்கக் கல்லூரிகளில் உறுப் பினராக இருக்கிறார்கள்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

(அ) ஆம்.

(இ) அரசர் கல்லூரி, புதுக்கோட்டை.
அரசினர் கலைக்கல்லூரி, விருத்தாசலம்.
கலைஞர் கருணாநிதி அரசினர் கலைக்கல்லூரி, திருவாரூர்.
அரசினர் பயிற்சிக் கல்லூரி, ஒரத்தநாடு.

திரு. எம். முத்தையா : தலைவர் அவர்களே, சென்னையில் உள்ள சட்டக்கல்லூரியில் மாணவர்களைப் பொறுக்குவதற்கான தேர்வுக்

குழுவில் அரிசன ஆசிரியர் யாராவது உறுப்பினர்களாக இருக்கிறார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பொதுவாக முதல்வர், அதற்கு அடுத்து இருக்கிற சீனியர் ப்ரொபசர், அடுத்து இருக்கிற அசிஸ்டெண்டு ப்ரொபசர் என்ற நிலைமையை ஒட்டி குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்படுகிறார்கள். அதிலே தாழ்த்தப்பட்ட மக்கள் வருவார்களேயானால், அவர்களும் உறுதியாக இடம் பெறுவார்கள்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இப்படி பிற்பட்ட மக்களை தேர்வு செய்வதற்கு அவர்களை நான்-அபிஷியல் மெம்பராகவாவது அந்தக் கமிட்டியில் சேர்த்துக்கொள்வதற்கு வழிவகைகள் செய்வார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பிற்பட்ட வகுப்பினர், தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களைச் சேர்ப்பது என்றால், அப்படிப்பட்ட ஒருவர் அந்தக் குழுவில் இருந்தால் தான் அவர்கள் சேர்க்கப்படுவார்கள் என்ற நிலையில் இல்லை. ஏனென்றால், நாம் அதற்கான விதிமுறைகளை வைத்திருக்கிறோம். சாதாரணமாக 31 சதவிகிதம் பிற்பட்ட வகுப்பினரைச் சேர்த்துத் தான் தீரவேண்டும், 18 சதவிகிதம் தாழ்த்தப்பட்ட வகுப்பினரைச் சேர்த்துத்தான் தீரவேண்டும். பொதுவாக, எல்லோரையும் சேர்த்துக் கணக்கிடும்பொழுது அதிலும் பிற்பட்ட வகுப்பினர், தாழ்த்தப்பட்ட வகுப்பினர் வரலாம். அதற்கும் மீறி 49 சதவிகிதம் இவர்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறதா என்றெல்லாம் எல்லாக் கல்லூரிகளிலும், எல்லா இடங்களிலும் கண்காணிக்கப்பட்டு வருகிறது. அப்படிப்பட்ட ஒருவர் இருந்தால் தான் அவர்கள் சேர்க்கப்படுவார்கள் என்று எண்ணுவதற்கு அவசியமில்லை. அதற்காக முறை வகுத்திருக்கிறோம். அந்த முறைப்படி நடைபெறுகிறது.

திரு. எம். தேவராசன் : அரசாங்கக் கல்லூரிகளுக்கு மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும் குழுக்களில் முன்பு சட்டமன்ற உறுப்பினர்கள் இடம் பெற்றுவந்தார்களே, அந்த முறை எதற்காக நீக்கப்பட்டு விட்டது? மீண்டும் சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தக் குழுக்களில் இடம் பெறுவார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அதிலே பல சங்கடங்கள் இருந்தன. இப்பொழுது இருக்கிற முறை

1972 மார்ச் 21]

மிகத் தெளிவாகவும், நன்ருகவும் இருக்கிறது. பொதுவாக சட்ட மன்ற உறுப்பினர்களும் சரியாக இருக்கிறது என்று கூறுகிற காரணத்திஞல் அந்த முறையே நீடிக்கப்படும்.

திரு. ந. தர்மலிங்கம் : இதுவரையில் எந்தெந்த மாவட்டத்தில் எந்தெந்த கல்லூரிகளில் அரிசன உறுப்பினர்கள் இந்தக் கமிட்டியில் மெம்பர்களாக போடப்பட்டிருக்கிருர்கள் என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, மூலக் கேள்வியே அதுதான். நான் அப்பொழுதே விடை கூறினேன். அரசினர் கல்லூரி, புதுக்கோட்டை, அரசினர் கலைக்கல்லூரி விருத்தாசலம், கலைஞர் கருணநிதி அரசினர் கலைக் கல்லூரி, திரு வாரூர், அரசினர் பயிற்சிக் கல்லூரி, ஒரத்தநாடு ஆகியவற்றில் இடம் பெற்றிருக்கிருர்கள்.

Government Arts College for women in North Madras

* 603 *Q.*—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state :

(*a*) the number of students studying in the Government Arts College for Women, North Madras at present;

(*b*) the number of students in each class;

(*c*) whether all the classes are provided with adequate benches for the students; and

(*d*) whether drinking water is available for the students?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) 1668.

(ஆ) புகுமுக வகுப்பு—758 பேர்.

இளங்கலை-முதலாண்டு—181 பேர்.

இளங்கலை-இரண்டாம் ஆண்டு—144 பேர்.

இளங்கலை-மூன்ரும் ஆண்டு—81 பேர்.

இளங்கலை (விஞ்ஞானம்)—முதலாண்டு—214 பேர்.

இளங்கலை (விஞ்ஞானம்)—இரண்டாம் ஆண்டு—164 பேர்.

இளங்கலை (விஞ்ஞானம்)—மூன்ரும் ஆண்டு—126 பேர்.

(இ) அண்டு (உ) ஆம்.